**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 20.12.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில் அக்ரி பிட்ச் ஃபெஸ்ட் 2023

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் மையத்தின் கீழ் இயங்கி வரும் இ-யுவா (E-YUVA) மையத்தின் மூலம் ஒரு நாள் அக்ரி பிட்ச் போட்டியானது “Agri PitchFest 2023” டிசம்பர் 20, 2023 அன்று நடத்தப்பட்டது. இந்த போட்டியானது வேளாண் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவருவதற்கான நோக்கத்தில் நடத்தப்பட்டது.

முதல் சுற்றில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவரும் பல்வேறு கல்லூரிகளை சார்ந்த 30 மாணவர் குழுக்களானது பங்கேற்று புதிய வேளாண் சார்ந்த யோசனைகள் மற்றும் திட்டங்களை காட்சிப்படுத்தினர். அதில் 12 சிறந்த வேளாண் தொழில் சார்ந்த குழுக்களானது அடுத்த சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியின் துவக்கவிழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதன்மையர் (SPGS) மற்றும் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர்தொழில்நுட்பவியல் துறை இயக்குநர் முனைவர். ந.செந்தில் அவர்கள் தனது துவக்க உரையில் வேளாண் தொழில் முனைவோர்களின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துரைத்து, மாணவர்களிடம் புதிய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளுக்கான எண்ணங்களுக்கான ஊக்குதல்களையும் வழங்கினார். மேலும் அவர்களது உரையில் E-YUVA மையத்தின் மூலம் பல்வேறு மாணவர்கள் பயனடைந்து வருவதாகவும் கூறினார். பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்கள் இம்மாதிரியான மாணவர்களின் வேளாண் சார்ந்த கண்டுபிடிப்புகளை பெரிதும் பாராட்டி ஊக்கபடுத்துவதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியை தலைமையேற்ற ஈரோடு கிரீநெரா. நியூட்ரியன்ஸ் நிறுவன நிர்வாக இயக்குநர் திரு. செந்தில் ரமேஷ் சுப்ரமணியம் அவர்கள் தனது சிறப்புரையில் தொழில் முனைய விரும்பும் மாணவர்களிடையே இருக்கவேண்டிய மூன்று முக்கிய பண்புகளைப் பற்றி எடுத்துரைத்தார். மேலும், அவர்களது புதிய கண்டுபிடிப்புக்களானது பிரச்சனைகளை நிவர்த்தி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும் எனவும் புதிய தொழில்முனைவோர்களுக்கான பல்வேறு விதமான நிதியுதவிகளை பற்றியும் விளக்கினார்.

முன்னதாக, தாவர தொழில்நுட்பவியல் துறைத்தலைவர் முனைவர் ஈ.கோகிலாதேவி அவர்கள் வரவேற்புரையாற்றினார். இறுதியாக, இ-யுவா மையத்தின் முதன்மை ஒருங்கிணைப்பாளர் முனைவர் லோ. அருள் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

இதனை தொடர்ந்து, இறுதிச்சுற்றுக்கு தேர்ந்தேடுக்கப்பட்ட 12 குழுக்களைச் சார்ந்த மாணவர்கள் அவர்களின் புதிய யோசனைகள் மற்றும் கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தினர். மூன்று சிறந்த யோசனைகள் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது. முதல் பரிசு மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களும், இரண்டாம் பரிசு கோயம்புத்தூர் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களும், மூன்றாம் பரிசினை கோயம்புத்தூர் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களும் பெற்றனர்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***